உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 28.07.2026 • மலர் 04 • இதழ்: 209 • செவ்வாய் • Edition : Nagercoil • 28.07.2026 • Vol : 04 • Issue : 209 • Page : 4 • Rs. 5/-

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

# போராடும் மாணவர்களை குறிவைப்பது நம்பிக்கை துரோகம்

## மத்திய அரசுக்கு சிஜேபி கண்டனம்



புது டெல்லி: ஜூலை. 28

"நாடு தழுவிய போராட்டத்தை நிறைவு செய்யும் எங்கள் முடிவு, மத்திய அரசு தனது வார்த்தையைக் காப்பாற்றும் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் மட்டுமே எடுக்கப்பட்டது. அந்த வாக்குறுதியிலிருந்து விலகிச் செல்வது நம்பிக்கை துரோகமாகும். இந்த நம்பிக்கைத் துரோகம் இளைஞர்களால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்படாது" என கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் சவுரவ் தாஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அசாம், மேற்கு வங்கம் மற்றும் பிஹார் உள்ளிட்ட மாநிலங்களில், பல்வேறு அரசு அமைப்புகளால் மாணவர்கள் மற்றும் பிற போராட்டக்காரர்கள் குறிவைக்கப்படுவது, கைது செய்யப்படுவது குறித்த செய்திகள் எங்களை வந்தடைந்துள்ளன. இது எங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது.

பாஜக அல்லது என்டிஏ ஆளும் மாநிலங்களில் எந்தவொரு போராட்டக்காரர் மீதும் இப்போதோ அல்லது எதிர்காலத்திலோ எந்த வித தண்டனை நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று இந்திய அரசு உறுதியளித்த பின்னரே, கரப்பான்பூச்சி ஜனதா கட்சி தனது நாடு தழுவிய போராட்டத்தை நிறுத்தி வைத்தது. எனவே, இம்மாநிலங்களிலிருந்து வரும் செய்திகள் மிகுந்த கவலைக்குரியவை.

முதலாவதாக, ஒவ்வொரு போராட்டக்காரருக்கும் நாங்கள் உறுதியளிக்க விரும்புகிறோம். தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், சாத்தியமான அனைத்து சட்ட உதவிகளையும் வழங்கவும், சம்பந்தப்பட்ட மாநிலங்களில் உள்ள சிறந்த வழக்கறிஞர்களுடன் எங்கள் சட்டக் குழு செயல்பட்டு வருகிறது.

இரண்டாவதாக, மத்திய அரசிடம், குறிப்பாக ஜே.பி.நட்டா மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோரிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது இது தான்: தடுத்து வைக்கப்பட்டவர்களை விடுவிப்பதன்மூலமும், நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்தவொரு போராட்டக்காரர் மீதும் கட்டாயப்படுத்துதல் அல்லது பழிவாங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படாது என்பதை உறுதி செய்வதன் மூலமும், எங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றுங்கள். பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளும் திரும்பப் பெறப்பட வேண்டும்.

இது தொடர்பாக எழுத்துப்பூர்வமான உத்தரவாதத்தை (ஜூலை 28) அன்று எங்களுக்கு வழங்குவதாக அளித்த வாக்குறுதியை இந்திய அரசுக்கு நினைவூட்டுகிறோம். நாடு தழுவிய போராட்டத்தை நிறுத்தி வைப்பதற்கான எங்கள் முடிவு நல்லெண்ணத்துடனும், அரசு தனது வார்த்தையைக்காப்பாற்றும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலும் மட்டுமே எடுக்கப்பட்டது.

அந்த வாக்குறுதியிலிருந்து விலகிச் செல்வது 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி' உடனான நம்பிக்கைத் துரோகமாக மட்டுமல்லாமல், போராட்டங்களுக்குப் பதிலாக பேச்சுவார்த்தையைத் தேர்ந்தெடுத்த லட்சக்கணக்கான இந்திய இளைஞர்களின் மீதான பொது நம்பிக்கையை மீறுவதாகவும் அமையும்.

இத்தகைய நம்பிக்கைத் துரோகம் இளைஞர்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது. வெறுமனே வாக்குறுதி அளிப்பதன் மூலம் அல்ல, மாறாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் மூலமே ஒரு அரசு நம்பகத்தன்மையைப் பெறுகிறது என்பதை இந்திய அரசுக்கு நினைவூட்டுகிறோம்.

இளம் போராட்டக்காரர்களிடம் நாங்கள் சொல்வது இதுதான்: உறுதியாக இருங்கள். நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். சிஜேபி தொடர்ந்து நிலைமையைக் கூர்ந்து கவனித்து வருகிறது. தற்போதைய சூழலுக்குத் தேவையான மிகுந்த அவசரம், பொறுப்புணர்வு மற்றும் நல்லெண்ணத்துடன் இந்திய அரசும், அனைத்து பாஜக/என்டிஏ மாநில அரசுகளும் செயல்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது கைதுசெய்யப்பட்டுள்ள அனைவரும் உடனடியாகவும், அதிகபட்சமாக நாளைய தினத்திற்குள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், அவர்கள் மீதான அனைத்து முதல் தகவல் அறிக்கைகளையும் உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்;

இல்லையெனில், நாங்கள் அடுத்தகட்டத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## காமன் வெல்த் பளு தூக்கும் போட்டியில் கோவில்பட்டி சங்கரலிங்கபுரத்தைச் சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி வெள்ளி பதக்கம் வென்று அசத்தல்



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சங்கரலிங்கபுரத்தை சேர்ந்தவர் முத்துப்பாண்டி. லோடுமேன் தொழில் செய்து வருகிறார். இவரது மனைவி பேச்சியம்மாள். இவர் தீப்பெட்டி கம்பெனியில் கூலி தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். இந்த தம்பதிக்கு சுரேஷ்குமார் மற்றும் ராஜா முத்துப்பாண்டி என இரண்டு மகன்கள் உள்ளனர். இதில் ராஜா முத்துப்பாண்டி சிறு வயது முதலே ஜிம்முக்கு சென்று விளையாடுவதில் ஆர்வம் உள்ளவராக இருந்து வந்தார் அவரது ஆர்வத்தை கண்டு உணர்ந்து அவரது பெற்றோர் அவரை தொடர்ந்து ஊக்கப்படுத்தி வந்தனர். மாவட்ட அளவில், மாநில அளவில் நடைபெற்ற பல்வேறு பளு தூக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார்.

மேலும் வட மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்று வெற்றி கோப்பைகளை கைப்பற்றி வந்தார். காமன்வெல்த் போட்டிகளிலும் பங்கேற்று இரண்டு முறை வெற்றி வாய்ப்பை இழந்த சூழலில் தற்போது நேற்று நடைபெற்ற 2026 காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் கோவில்பட்டி சங்கரலிங்கபுரத்தை சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி ஆடவர் 65 கிலோ பளு தூக்குதல் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழக வீரர் ராஜா முத்துப்பாண்டிக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.30 லட்சம் ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டு முதலமைச்சரால் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் பிரமுகர்களும் அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

பளு தூக்கும் போட்டியில் வெற்றி பெற்று வெள்ளிப் பதக்கம் வென்ற ராஜா முத்துப்பாண்டியன் குடும்பத்தினர் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடைந்துள்ளனர்.

## நாகர்கோவிலில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



நாகர்கோவில், ஜூலை. 28

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில்கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று 27. ம் தேதி நடைபெற்றது. இந்த நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள்கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித் தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 405 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு எளிதில் தீர்வு காணும் நோக்கில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மாற்றுத்திறன் பயனாளிகளின் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பத்மபிரியா, தனித்துணை ஆட்சியர் சமூகபாதுகாப்பு திட்டம் சரவணன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## தஞ்சாவூர் அடுத்துள்ள கள்ளப் பெரம்பூர் ஏரியில் 3 கி.மீ நீளத்துக்கு புதிதாக கரை

### கலெக்டர் ரேவதி பார்வையிட்டார்



தஞ்சாவூர் ஜூலை 27

தஞ்சாவூர் அருகே கள்ளப் பெரம்பூர் ஏரியில் 3 கி.மீநீளத்துக்கு புதிதாக கரை அமைக்கப்பட்டு வருகிறது என்றார் மாவட்ட கலெக்டர் ரேவதி

தஞ்சாவூர் அருகே உள்ள கள்ளப் பெரம்பூர் பெரிய ஏரியில் மேற் கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகளை பார்வையிட்டு அவர் தெரிவித்ததாவது :

நீர்வளத்துறைகட்டுப்பாட்டில் உள்ள இந்த ஏரி ஒரு டிஎம்சி கொள்ளளவு கொண்டது. இந்த ஏரி ஏறத்தாழ 8 கி.மீ நீள கரையுடன்640 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதன் மூலம் ராயந்தூர், தென்னங்குடி, சக்கர சாமந்தம் ,சீராளூர், கள்ளப் பெரம்பூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 2662 ஏக்கர்விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.இதை உறுதி செய்யும் வகையில் மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வலர்கள், ஊர் பொதுமக்கள் பங்களிப்புடன் கள்ளப்பெரம்பூர் ஏரி சீரமைக்கப் பட்டு வருகிறது

இதன் அடிப்படையில் முதல் கட்டமாக 3 கி.மீ நீலத்திற்கு புதிதாக கரைய அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் கரை அமைக்கும் பணி முடிவுற்றவுடன், ஏறி தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளுக்கு பயன்பெறும் வகையில் நீர் சேமிப்பு வைக்கப்படும். இதன் மூலம் இப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தேவையான நீர் ஆதாரத்தை உறுதி செய்யவும், விவசாயிகளின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தவும் உறு துணையாக அமையும் என்றார் கலெக்டர்

அப்போது தஞ்சாவூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் விஜய் சரவணன், நீர்வளத்துறை உதவி பொறியாளர் ரமா பிரபா, தஞ்சாவூர் வட்டாட்சியர் மூர்த்தி, தன்னார்வத் தொண்டு நிறுவன செயலர் நிர்மல் குமார் உள்ளிட்டோருடன் இருந்தனர்

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701




## 'போதை பொருள் இல்லா இளைஞர் இந்தியா' மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கலெக்டர் வழங்கினார்

நாகர்கோவில், ஜூலை. 28

இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மேரா யுவா பாரத் கன்னியாகுமரி சார்பில், போதை பொருள் இல்லா இளைஞர் இந்தியா (நஷா முக்த் யுவா பாரத்) என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு. பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

இளைஞர்களிடையே போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், ஆரோக்கியமான மற்றும் பொறுப்புணர்வுமிக்க சமூகத்தை உருவாக்கவும் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் முழக்க வாசகம், ஓவியப் போட்டி, நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப் பாடல், மைம், குறும்படம் / ரீல்ஸ், ஸ்லாம் கவிதை, பேச்சுப் போட்டி உள்ளிட்ட 8 வகையான போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் 900க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மாவட்டத்தின் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், கல்வி நிறுவனங்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும்நாள்கூட்டத்தில்,ஓசூர்வட்டம்,பேகேப்பள்ளிகோவிந்தாஅக்ரஹாரம்கிராமத்தைச் சேர்ந்த .சங்கர் அவர்கள் தனது மகன்.முகிலேஷ் (வயது 6) அவருக்கு இருதய அறுவை சிகிச்சைமேற்கொள்ளஉதவிவேண்டிமனுஅளித்ததையடுத்து,உடனடிநடவடிக்கையாக, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டையை மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ் குமார் வழங்கினார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, தனித்துனை ஆட்சியர்.சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நாராயணா ஹெல்த் சிட்டி 10,000 எலும்பியல் அறுவை சிகிச்சைகளை நிறைவு செய்து புதிய சாதனை




ஈரோடு ஜூலை 28 பெங்களூரு நாராயணா ஹெல்த் சிட்டி கடந்த மூன்று ஆண்டுகளில் 10,000 எலும்பியல் அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து புதிய மைல் கல்லை எட்டியுள்ளது. மேம்பட்ட மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, எலும்பியல் புற்றுநோய் சிகிச்சை, விபத்து காய சிகிச்சை, முதுகுத்தண்டு சிகிச்சை மற்றும் சிக்கலான மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைகள் ஆகிய துறைகளில் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஈரோடு மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளிகள் உலகத் தரம் வாய்ந்த எலும்பியல் சிகிச்சையை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ரோபோடிக் உதவியுடன் மேற்கொள்ளப்படும்அறுவைசிகிச்சைகள், அதிநவீன இமேஜிங் தொழில்நுட்பம், தனிப்பயனாக்கப்பட்ட இம்ப்ளாண்ட்கள் மற்றும் முழுமையான மறுவாழ்வு நடைமுறைகளின் ஆதரவுடன், நாராயணா ஹெல்த் சிட்டியின் எலும்பியல் துறை உயர்தர சிகிச்சை அளித்து வருகிறது. சமீபத்தில், முழங்கால் பகுதியில் தீவிர எலும்புப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 7 வயது சிறுமிக்கு, ஜெர்மனியில் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டு, எதிர்கால உடல் வளர்ச்சிக்கு ஏற்ப விரிவடையும்தன்மைகொண்ட செயற்கை மூட்டு வெற்றிகரமாக பொருத்தப்பட்டது. அறுவை சிகிச்சை முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் சிறுமி முழுமையாக நலமுடன் வாழ்கிறார். இது குறித்து எலும்பியல் துறை மூத்த ஆலோசகர் டாக்டர் சுமன் பைரேகவுடா தெரிவிக்கையில், நவீன இம்ப்ளாண்ட் தொழில்நுட்பங்களால் 90 முதல் 95 சதவீதத்திற்கும் அதிகமான நோயாளிகளுக்கு உறுப்பைப் பாதுகாக்கும் அறுவை சிகிச்சையை மேற்கொள்ள முடிகிறது என்றார்.

அதேபோல, 20 ஆண்டுகளாக இரு முழங்கால்களிலும் மூட்டுவாத பாதிப்பால் அவதிப்பட்டு வந்த 55 வயது பெண்ணுக்கு, அதிநவீன ரோபோடிக் உதவியுடன் முதன்மை முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஒரே நாளில் அவர் உதவியுடன் நடக்கத் தொடங்கி, ஒரு மாதத்திற்குள் சுயமாக நடக்கும் திறனைப் பெற்றார். இது குறித்து எலும்பியல் துறை ஆலோசகர் டாக்டர் பிரதாப் கூறுகையில், ரோபோடிக் சிகிச்சை முறை மூலம் அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய வலி குறைவதோடு நோயாளிகள் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்ப முடிகிறது என்று குறிப்பிட்டார். மருத்துவ நிபுணத்துவம், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பல்துறை மருத்துவ நிபுணர்களின் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம், நாராயணா ஹெல்த்சிட்டி தொடர்ந்து உயர்தர சிகிச்சைகளை வழங்கி சிறப்புமிக்க மருத்துவ மையமாகத் திகழ்கிறது என்று ஆஸ்பத்திரி நிர்வாகிகள் பெருமையுடன் கூறினர்.




# கோவில் தரிசன கட்டணத்தை ரத்து செய்யக்கோரி இந்து முன்னணியினர் ஆர்ப்பாட்டம்

ஈரோடு ஜூலை 28 ஈரோடு மாநகர் மாவட்ட இந்து முன்னணி சார்பில் ஈரோட்டில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர்ஜெகதீசன்தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொது செயலாளர் கார்த்தி முன்னிலை வகித்தார். கோவை கோட்ட பொது செயலாளர் கிருஷ்ணன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

இதில் செயலாளர் கள் சங்கர் முரளி ரமேஷ் கார்த்திகேயன் வினோத் குமார் மாவட்ட துணை தலைவர் சண்முகம் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தேவராஜ் கவின் பழனிவேல் சக்தி வேல் சுதாகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கோவில் தரிசன கட்டணத்தை ரத்து செய்யக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# மருத்துவமனை புதுசு, பெஞ்ச் பழசு

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியத்துக்குஉட்பட்டபேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 2 கோடி மதிப்பு செலவிட்டில் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது ஆனால் இதில் அடிப்படை வசதிகள் ஏதுமில்லாமல் இருப்பதால் மக்கள்அவதிஅடைகின்றனர் பேரம்பாக்கம் அருகில் ஏற்பட்ட சாலை விபத்தில் இருவருக்கு காயம் ஏற்பட்டு முதல் உதவி சிகிச்சைக்காக பேரம்பாக்கம் ஆரம்ப சுகாதார



நிலையத்துக்கு கொண்டு சென்றனர் இங்கு ஆட்டோவில் இருந்து அடிபட்ட நபரை இறக்கி மருத்துவமனைக்குள் கொண்டு செல்வதற்கு டெக்ச்சர்கூட இல்லாமல் பழையகட்டைபெஞ்சை கொண்டு வந்து அடிபட்ட நோயாளியை இறக்கி வைத்தியம் பார்த்தது அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது

# கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் 151 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மாலை அணிவித்து மரியாதை



சுசீந்திரம்.ஜீலை.28 சுசீந்திரம் அருகே உள்ள தேரூரில் பிறந்து தனது கவிதையால் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களது 151வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று சுசீந்திரம் கிராம நிர்வாக அலுவலகத்தில் அமைந்துள்ள கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் முழு உருவ வெங்கல சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதாப் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் அவருடன் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் வேல் முருகன் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஜான் ஜெகத் பிரைட் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம் சுசீந்திரம் பேரூராட்சி தலைவர் அனுசுயா செயல் அலுவலர் அம்புஜம் வருவாய் ஆய்வாளர் பிரேம கீதா கிராம நிர்வாக அலுவலர் வளர்மதி உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் உட்பட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் குறை தீர்வு கூட்டம்



திருப்பத்தூர்: ஜூலை:28, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர்கு.ரவிகுமார் பெற்றுக்கொண்டார். உடன்மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. நாராயணன், தனித் துணை ஆட்சியர் (ச. பா.தி) பூஷணகுமார், உதவி ஆணையர்(கலால்) வேடியப்பன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தாமரைமணாளன், உதவி இயக்குநர்கள் ஊராட்சிகள் (தெற்கு) மகாதேவன், (வடக்கு) முருகன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

## நாகர்கோவில் அருகே

# ஆட்டோ மீது மோட்டார் சைக்கிள் மோதி வாலிபர் உயிரிழப்பு

நாகர்கோவில், ஜூலை. 28 கன்னியாகுமரியை அடுத்த சாமிதோப்பு பகுதியை சேர்ந்தவர் பரமசிவம் மகன் பிரவீன் (23). இவர் நேற்று முன்தினம் தனது மோட்டார்சைக்கிளில் நாகர்கோவிலுக்கு சென்று விட்டு, நள்ளிரவில் வீடு திரும்பி கொண்டு இருந்தார். நாகர்கோவிலில் அடுத்த கரியமாணிக்கபுரம் பகுதியில் பிரவீன் மோட்டார் சைக்கிளில் வரும் போது,

எதிரே வந்த ஆட்டோ மீது அவரது மோட்டார் சைக்கிள் எதிர்பாராத விதமாக மோதி விபத்துக் கொள்ளானது. இதில் தூக்கி வீசப்பட்ட பிரவீனுக்கு தலை மற்றும் உடலில் பல இடங்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து நாகர்கோவில் போக்குவரத்து பிரிவு போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

முதற்கட்ட விசாரணையில் பிரவீன் மோட்டார் சைக்கிளை அதிவேகமாக ஓட்டி சென்று ஆட்டோ மீது மோதியது தெரியவந்துள்ளது. பிரவீனின் உடலை மீட்ட போலீசார் பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நாகர்கோவில் போக்குவரத்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !



# ஓசூர் மூவேந்தர் நகரில் நீண்ட நாட்களாக பழுதாக உள்ள ஆழ்துளை கிணறு சரி செய்த ஓசூர் மாநகராட்சி துணை மேயர் சி.ஆனந்தய்யா

ஓசூர்.ஜீலை.28 கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகராட்சி ஏழாவது வார்டுக்கு உட்பட்ட மூவேந்தர் நகரில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று நீண்ட நாட்களாக பழுதாகி உள்ள ஆழ்துளை கிணறு சரி செய்து வழங்கிய ஓசூர் மாநகராட்சி துணை மேயர், மாநகராட்சி ஏழாவது வார்டு மாமன்ற உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகம் ஓசூர் மாநகராட்சி மேற்கு பகுதி கழக செயலாளர் சி.ஆனந்தய்யா, அரசு அதிகாரிகளிடம் கலந்துப் பேசி உடனடியாக பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டதற்கு ஓசூர் மாநகர மேயர்க்கு அந்தப் பகுதி பொதுமக்கள் நன்றி கூறினார். இந்த நிகழ்வில் சீனிவாசன், சங்கர், பிரகாஷ், மற்றும் அப்பகுதி பொதுமக்கள் உடன் இருந்தனர்.

# ஈரோட்டில் திராவிடர் புரட்சிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!




ஈரோடு, ஜூலை 28 : நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும், டெல்லியில் மாணவர்கள் மீது நடைபெறும் அடக்குமுறைகளைக் கண்டித்தும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தியும், ஒன்றிய அரசை கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் திராவிடர் புரட்சிக் கழகம் சார்பில் ஈரோடு காளைமாட்டு சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் புரட்சிக் கழகத்தைச் சேர்ந்த நஞ்சனாபுரம் வேலு தலைமை தாங்கினார்

இதில் புரட்சிகர இளைஞர் முன்னணியின் மாநகரச் செயலாளர் செயப்பிரகாசம், திராவிடர் புரட்சிக் கழகத்தின் பொதுச் செயலாளர் சௌந்திரபாண்டியன், தி.மு.க. மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார், திராவிடர் கழக மாநில அமைப்புச் செயலாளர் சண்முகம், கொங்கு விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர்விஸ்வநாதன், தமிழ்ப்புலிகள் கட்சியின் மத்திய மாவட்டச் செயலாளர் சிந்தனைச்செல்வன், மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் சித்திக், ஆதித்தமிழர் பேரவையின் தெற்கு மாவட்டச் செயலாளர் வீரவேந்தன், திராவிடர் எழுச்சி பேரவையின் தலைவர் சக்திவேந்தன், ஈரோடு மக்கள் இயக்கத்தின் பொறுப்பாளர் நிலவன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் பள்ளிபாளையம் பகுதி பொறுப்பாளர் மாணிக்கம் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

பேச்சாளர்கள், நீட் தேர்வு சமூக நீதி மற்றும் சமத்துவத்திற்கு எதிரானது என்றும், நுழைவுத் தேர்வுகள் மாநிலங்களின் கல்வி உரிமையை பாதிப்பதாகவும் தெரிவித்தனர். மேலும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் கல்விக் கொள்கைகளுக்கு எதிராக தங்களது கருத்துகளை முன்வைத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் புரட்சிக் கழகத்தைச் சேர்ந்த சே.மே.மரியதாஸ், சகாயபுரம் பிரபு, சதிஸ்சமரன், வேப்பம்பாளையம் ரமேஷ், வழக்குரைஞர் சுபாஷ், கார்த்திக் நெடுமாறன் ஆகியோரும், புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த கலியபெருமாள், ரங்கசாமி, ராமசாமி, ரவி, சிவா, பிரபு, வாசு, முகில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில் புரட்சிகர இளைஞர் முன்னணியைச் சேர்ந்த குரு நன்றியுரை ஆற்றினார்.

# கடையம் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் மீது புகார்; நடவடிக்கை கோரி ஆட்சியரிடம் மனு

தென்காசி, ஜூலை.28 தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியம் 17 வார்டுகளை கொண்ட பகுதியாகும் கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கடந்த 1ஆம் தேதி ஊராட்சி ஒன்றிய குழு சாதாரண கூட்டம் தலைவர் செல்லம்மாள் தலைமையில் நடைபெற்றது. அப்போது அங்கு நடைபெற்று வரும் பல்வேறு முறைகேடுகள் குறித்து உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய நிலையில் அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான வேலை பணிகளுக்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் நிறைவேற்ற ப்பட்ட வேலை பணிகளுக்கு ஏலம் விடாமல் ஆணையாளரும், மேலாளரும் ஒப்பந்தகாரர்களிடம் பேரம் பேசி காலம் தாழ்த்தி வருவதாகவும் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.



இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனு வழங்கியதற்கு உறுப்பினர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஆணையாளரும், மேலாளரும் மிரட்டுவதாக உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்த உறுப்பினர்கள் சிலர் மாவட்ட வருவாய் அலுவலர் வீராச்சாமியிடம் கடையம் ஊராட்சி ஒன்றிய அலுவலக ஆணையாளர் மற்றும் மேலாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தணிக்கை செய்ய வேண்டும் என்று உறுப்பினர்கள் ஜெயக்குமார், ஜனதா, இசக்கியம்மாள், மணிகண்டன் ஆகியோர் புகார் மனு வழங்கினர். தாங்கள் வழங்கிய மனுவிற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், தவறும் பட்சத்தில் உறுப்பினர்களும், மக்களும் இணைந்து கடையத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்துவோம் என தெரிவித்தனர்.

# சேலத்தில் உள்ளூர் விடுமுறை

சேலம் ஜூலை 28

சேலம் மாநகரில் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் சேலம் மாநகர் மற்றும் மாவட்டத்தில் திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்படும். இந்த வருடமும் அருள்மிகு கோட்டை மாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளுக்கு வருகிற 05.08.2026 புதன்கிழமை அன்று உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூர் விடுமுறை அன்று அரசு பாதுகாப்புக்காக அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு அன்றைய தினம் சேலம் மாவட்டத்தில் உள்ள மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும். இந்த உள்ளூர் விடுமுறைக்கு பதிலாக சேலம் மாவட்டத்தில் அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளுக்குவருகிற08.08.2026 சனிக்கிழமை அன்று பணி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# பணம் வைத்து சூதாடிய ஐந்து பேர் கைது

சுசீந்திரம்.ஜீலை.28

சுசீந்திரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் தனிஸ் லியோன் தலைமையில் போலீசார் இலந்த விளைப் பகுதியில் ரோந்து பணி மேற்கொள்ளும் போது இலந்தவிளைதுறை தென்னந்தோப்பு பகுதியில்பணம் வைத்துசூதாடியபள்ளம்பகுதியைசார்ந்தராமச்சந்திரன் 56 இலந்த விளைப் பகுதியைச் சார்ந்த திருப்புகழ் 49 அதே பகுதியைச் சார்ந்த செல்லையா 70 நைனார் புதுர் பகுதியைச் சார்ந்தவிக்னேஷ் 27 நைனார் புதுர் பகுதியைச் சார்ந்த அனந்தராஜன் 49 ஆகியோர் எந்த அனுமதியும் இன்றி தென்னந்தோப்பில் வைத்து சூதாடியதை கண்டுபிடித்து ஐந்து பேரையும் கைது செய்து சுசீந்திரம் காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக சிவபிரசாத் பதவியேற்பு




தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக சிவபிரசாத் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வந்த அபிஷேக் குப்தா சிவகங்கை மாவட்டத்திற்கு பணியிட மாற்றப்பட்டு, சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வந்த சிவபிரசாத், தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய எஸ்பியாக நியமிக்கப்பட்ட சிவபிரசாத், நேற்று காலை காவல் தலைமையகத்திற்கு வருகை தந்தார். முன்னதாக, அவருக்குக் காவல் துறை ஆயுதப்படை சார்பில் கம்பீரமான அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கோப்புகளில் கையெழுத்திட்டுத் எஸ்பியாக பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

அவருக்கு தூத்துக்குடி மாவட்டத்தைச் உள்ள காவல் துறை சார்ந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் மாவட்ட காவல் அதிகாரிகள், அமைச்சுப் பணியாளர்கள்நேரில்சந்தித்துத் தங்களது வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொண்டனர்.

# கோவையில் போக்குவரத்து துறை சார்பில் விழிப்புணர்வு




கோவை ஜூலை:28

கோவை மேட்டுப்பாளையம் சாலை அரசு போக்குவரத்து கழகம் பணிமனையில் உள்ள ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு போக்குவரத்து பற்றிய விழிப்புணர்வு,சாலை விபத்து ஏற்படாமல் தவிர்க்க,பாதுகாப்பாக சாலையைக் கடப்பது,சாலையில் வாகனங்களை பாதுகாப்பாக ஓட்டுவது,போக்குவரத்து விதிகளை மதிப்பது குறித்த விழிப்புணர்வுமுகாம்சாய்பாபாகாலனிபோக்குவரத்து உதவி ஆய்வாளர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா,இ.ஆ.ப., தலைமையில் மதுரைமாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்மக்கள்குறைதீர்க்கும்நாள்கூட்டம்நடைபெற்றது. பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு,முதியோர்,விபத்துநிவாரணம்,உதவித்தொகைஉள்ளிட்டபல்வேறுகோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டன.

# தனியார் மதுபானக்கூடம் அமைக்க எதிர்ப்பு நுகர்வோர் பாதுகாப்பு மையம் சார்பில் ஆட்சியரிடம் மனு



ஈரோடு, ஜூலை 28 :

நம்பியூர் பேரூராட்சிக் குட்பட்ட மக்கள் குடியிருப்புப் பகுதியில் தனியார் மதுபானக்கூடம் (11 to 11) மற்றும் எலைட் மதுபான பார் அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என வலியுறுத்தி, நுகர்வோர் பாதுகாப்பு மையம், நம்பியூர்சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

நம்பியூர் பேரூராட்சிக் குட்பட்ட கணேசபுரம், குமார் நகர், ஸ்கை வே அருள் அவென்யூ, லக்கி நகர், சுபவேலன் நகர், அழகாபுரி நகர் உள்ளிட்ட பகுதிகளில் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், அப்பகுதியில் தனியாருக்கு சொந்தமான இடத்தில் தனியார் மதுபானக்கூடம் (11 to 11) மற்றும் எலைட் மதுபான பார் அமைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதிக மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதியில் மதுபானக்கூடம் செயல்பட்டால் பெண்கள், குழந்தைகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும். மேலும், அப்பகுதியில் அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில் அமைந்துள்ளதுடன், தினசரி ஏராளமான பக்தர்கள் வழிபாட்டிற்கு வந்து செல்கின்றனர்.

கோயிலுக்கு அருகிலேயே காமாட்சி அம்மன் திருமண மண்டபமும் அமைந்துள்ளதால், திருமண நிகழ்ச்சிகளுக்காக பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் அதிக அளவில் வந்து செல்லும் பகுதியாகவும் உள்ளது.

இத்தகைய சூழலில் அப்பகுதியில் மதுபானக் கூடம் மற்றும் எலைட் பார் அமைக்கப்பட்டால், கோயிலுக்கு வரும் பக்தர்கள், திருமண மண்டபத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் அருகில் வசிக்கும் குடியிருப்புவாசிகளுக்கு பெரும் இடையூறு ஏற்படுவதுடன், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதனால் அப்பகுதியில்சட்டம்ஒழுங்கு பிரச்சினைகள் உருவாகும் அபாயமும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, அப்பகுதியில் தனியார் மதுபானக்கூடம் மற்றும் எலைட் மதுபான பாருக்கு அனுமதி வழங்கக்கூடாது என்றும், ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அதை உடனடியாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நுகர்வோர் பாதுகாப்பு மையம், நம்பியூர் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 07 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,32,100/மதிப்பிலானஅரசுநலத்திட்டஉதவிகளைமாவட்டஆட்சியர்கு.ரவிகுமார்வழங்கினார். உடன்தனித்துணைஆட்சியர்(ச.பா.தி)பூஷணகுமார்,மாவட்டமாற்றுத்திறனாளிகள்நலஅலுவலர் தகண்ணன் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# சேலத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



சேலம் ஜூலை 28

சேலம் மாவட்ட பொதுமக்களிடமிந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன்தீர்வுகாணவும், அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு அலுவலர்கள் விரைந்துஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென அதிலும் குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கும் மனுக்கள் மீண்டும் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 490 மனுக்கள் பெறப்பட்டது. மேலும் மாற்றுத்திறனாளிகள் வழங்கிய 25 மனுக்கள் பெற்றுஉரியநடவடிக்கை மேற்கொள்ளவும்தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார்

# ஈரோட்டில் கல் குவாரி, கிரஷர் பணிகளுக்கு எதிர்ப்பு மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் மனு



ஈரோடு, ஜூலை 28:

ஈரோடு மாவட்டம் பெத்தாம்பாளையம் பகுதியில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள கல் குவாரி மற்றும் கல் உடைக்கும் கிரஷர் பணிகளை நிறுத்தநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில், ஏற்கனவே கடந்த 26.05.2025 அன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இதே கோரிக்கையுடன் மனு அளிக்கப்பட்டதாகவும், அப்போது 30க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 100க்கும் அதிகமான பொதுமக்கள் கையெழுத்திட்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்திருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மனுவின் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களும் தற்போதைய மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அந்த மனுவிற்கு பிறகு சில காலம் கல் குவாரி மற்றும் கிரஷர் பணிகள் நடைபெறாமல் இருந்த நிலையில், தற்போது மீண்டும் அந்தப் பகுதியில் பணிகளைத் தொடங்க உள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கிரஷர் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள இடத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுவதும் விவசாய நிலங்களாக உள்ளதாகவும், அப்பகுதியில் 30க்கும் மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் இருப்பதால், குவாரி மற்றும் கிரஷர் செயல்பாடுகளால் நிலத்தடி நீர்மட்டம், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கிரஷர் அமைக்கப்படவுள்ள இடத்தை ஒட்டிய பகுதியில் சுமார் ஐந்து குடியிருப்புகள் உள்ளதால், தூசி, சத்தம் உள்ளிட்ட மாசுபாடுகள் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பாதிக்கும் என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்

எனவே, விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, பெத்தாம்பாளையம் பகுதியில் கல் குவாரி மற்றும் கிரஷர் பணிகளுக்கு அனுமதி வழங்காமல், திட்டத்தை முழுமையாக நிறுத்த மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.



# தருமபுரி குப்பாகவுண்டர் தெரு மாரியம்மன் கோவில் ஆடி விழா!

## பக்தி பரவசத்தில் பால்குட ஊர்வலம்!!

தருமபுரி ஜூலை 28

தருமபுரி நகர பகுதியில் அமைந்துள்ள குப்பாகவுண்டர் தெருவில் அருள்பாலிக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலின் வருடாந்திர ஆடித்திருவிழா, பக்தி நிறைந்த சூழலில் தொடங்கியது. ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும் இந்த திருவிழா, இந்த ஆண்டும் ஏராளமான பக்தர்களின் பங்கேற்புடன் வெகு விமரிசையாக நடைபெற்றது

திருவிழாவையொட்டி குப்பாகவுண்டர் விநாயகர் கோவிலில் இருந்து பால்குட ஊர்வலம் தொடங்கப்பட்டது. சிறப்பு பூஜைகளுக்கு பின்னர், அம்மனின் திருநாமங்களை முழங்கியபடி, பக்தர்கள் தலையில் பால்குடங்களை சுமந்து நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். இந்த பால்குட ஊர்வலம் குப்பாகவுண்டர் விநாயகர் கோவிலில் இருந்து புறப்பட்டு, தருமபுரி கடைவீதி, அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வழியாக மீண்டும் குப்பாகவுண்டர் தெருவில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவிலை வந்தடைந்தது.

ஊர்வலம் சென்ற வழியெங்கும் பக்தர்கள் வரவேற்று, தீபாராதனை காட்டி அம்மனின் அருளைப் பெற்றனர். பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் பக்தி உணர்வுடன் பால்குடம் ஏந்தி கலந்து கொண்டது விழாவின் சிறப்பம்சமாக அமைந்தது. மேளதாளங்கள் முழங்க, அம்மன் பக்திப் பாடல்கள் ஒலிக்க, பக்தர்களின் கோஷங்களால் நகரமே ஆன்மிகச் சூழலால் நிரம்பியது. பால்குட ஊர்வலம் கோவிலை வந்தடைந்ததைத் தொடர்ந்து, அருள்மிகு மாரியம்மனுக்கு பக்தர்கள் கொண்டு வந்த புனித பாலால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மலர்கள் மற்றும் பல்வேறு அலங்காரங்களால் அம்மன் எழில்மிகு திருக்கோலத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக ஜூலை 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் அம்மனுக்கு மகா அபிஷேகம், சிறப்பு அலங்காரம், பூஜைகள் நடைபெற உள்ளது. இதே போல் கோவிலில் அருள் பாலிக்கும் விநாயகர், மகாலட்சுமி, மகாவிஷ்ணு மற்றும் முருகப்பெருமான் சன்னதிகளிலும் சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. இந்த ஆண்டு திருவிழாவில் தருமபுரி மற்றும் சுற்று வட்டார பகுதி சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி அம்மனின் அருளை பெற்றனர். பக்தர்களின் திரளான பங்கேற்பால் குப்பா கவுண்டர் தெரு முழுவதும் திருவிழா கோலமாக காட்சி யளித்தது. விழா குழுவினர் சார்பில் அனைவருக்கும் பிரசாதங்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# தருமபுரி ரயில் நிலையத்தில் பயணிகள் ரயில் பெட்டியின் அடியில் திடீர் தீ பயணிகளின் சமர்த்தியத்தால் பெரும் விபத்து தவிர்ப்பு




தருமபுரி ஜூலை 28

தருமபுரிரயில்நிலையத்தில் பயணிகள் ரயிலின் ஒரு பெட்டியின் அடிப்பகுதியில் திடீரென தீப்பிடித்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பயணிகள் உடனடியாக தகவல் தெரிவித்ததையடுத்து ரயில்வே பாதுகாப்புப் படையினர் விரைந்து செயல்பட்டு தீயை அணைத்ததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. சேலத்தில் இருந்து தொப்பூர், தருமபுரி, ராயக்கோட்டை, ஓசூர் வழியாக பெங்களூரு செல்லும் பயணிகள் (பேசஞ்சர்) ரயில் தினமும் காலை மற்றும் மாலை என இருவேளை இயக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், பெங்களூருவில் இருந்து சேலம் நோக்கி புறப்பட்ட பயணிகள் ரயில் மாலை சுமார் 7.15 மணியளவில் தருமபுரி ரயில் நிலையத்தின் முதல் நடைமேடையை வந்தடைந்தது. அப்போது ரயிலின் ஐந்தாவது பெட்டியின் அடிப்பகுதியில் இருந்து திடீரென புகையுடன்தீப்பொறிகள் பறந்துதீ எரிவதை சில பயணிகள் கவனித்தனர். உடனடியாக இதுகுறித்து ரயில்வே பாதுகாப்புப் படையினருக்கும், ரயில்வே ஊழியர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலறிந்த ரயில்வே பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட ஆய்வில், ரயிலின் சக்கரத்தில் பொருத்தப்பட்டிருந்த பிரேக், சக்கரத்துடன் ஒட்டிக்கொண்டதால் ஏற்பட்ட அதிக உராய்வு காரணமாக ரப்பர் பகுதி தீப்பிடித்து எரிந்தது தெரியவந்தது. பயணிகளின் சாமர்த்தியமும், ரயில்வே பாதுகாப்புப் படையினரின் விரைவான நடவடிக்கையின் காரணமாக பெரும் தீ விபத்து தவிர்க்கப்பட்டது. இந்தச் சம்பவத்தால் ரயில் சுமார் 45 நிமிடங்களுக்கும் மேலாக தருமபுரி ரயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டு பின்னர் பழுது சரி செய்யப்பட்டு பிறகு சேலம் நோக்கி புறப்பட்டு சென்றது. இந்த திடீர் தீ விபத்து காரணமாக தருமபுரி ரயில் நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# தருமபுரி மாவட்ட பேரூராட்சிகள் சார்பில் தூய்மை பணியாளர்களுக்கான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் சிறப்பு முகாம்



தருமபுரி ஜூலை 28 தருமபுரி மாவட்ட பேரூராட்சிகளின் சார்பில், தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் அரசு சேவைகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் சிறப்பு முகாம் தருமபுரி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த முகாமில் தூய்மை பணியாளர்கள், கழிவுநீர் மற்றும் செப்டிக் டேங்க் பராமரிப்பு பணியாளர்கள், வீடு தோறும் கழிவு சேகரிக்கும் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் தங்களது குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர். முகாமில் அரசு சார்ந்த பல்வேறு துறைகள் சார்பில் தனித்தனி அரங்குகள் அமைக்கப்பட்டு,தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நேரடியாக சேவைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு துறையினரும் தங்களது துறை சார்ந்த அரசுத் திட்டங்கள், நலத்திட்ட உதவிகள், விண்ணப்பிக்கும் நடைமுறைகள் மற்றும் பயன்கள் குறித்து விரிவாக விளக்கமளித்ததுடன், தகுதியான பயனாளர்களிடமிருந்து விண்ணப்பங்களையும் பெற்றனர்.

மேலும், பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு, தொழிலாளர் நல வாரிய நலன்கள், கல்வி உதவித்தொகை, விபத்து மற்றும் உயிர்காப்பீட்டுத் திட்டங்கள், ஓய்வூதியத் திட்டங்கள், குடும்ப நல உதவிகள் உள்ளிட்ட பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அதேபோல், கழிவுநீர் மற்றும் செப்டிக் டேங்க் பணியாளர்கள் பாதுகாப்பு உபகரணங்களை கட்டாயமாக பயன்படுத்துவதன் அவசியம், மனித உயிருக்கு ஆபத்தான கைமுறைகழிவுநீர்சுத்திகரிப்பு பணிகளைத் தவிர்ப்பது, இயந்திரமயமான முறையில் பணிகளை மேற்கொள்வது தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. தூய்மை பணியாளர்கள் மற்றும் கழிவு சேகரிப்பு தொழிலாளர்களுக்கு அரசு வழங்கும் சமூக பாதுகாப்பு உரிமைகள், தொழிலாளர் நல திட்டங்களில் பதிவு செய்யும் நடைமுறைகள், அரசின் பல்வேறு உதவிகளை எளிதில் பெறும்வழிமுறைகள் குறித்தும் அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்கினார்கள். தகுதி உடைய பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகளை விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த முகாமில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், பேரூராட்சி அலுவலர்கள், அரசு துறையினர் மற்றும் தூய்மை பணியாளர்கள் அவர்களின் குடும்பத்தினர் என ஏராளமானோர் கலந்து கொண்டு அரசின் சேவைகள் மற்றும் நல திட்டங்கள் குறித்து நேரடியாக பயனடைந்தனர்.

# குழித்துறை அருகே கொய்யா பழம் பறிக்கும் போது மாடியில் இருந்து தவறி விழுந்த பெண் உயிரிழப்பு

களியக்காவிளை, ஜூலை. 28 குழித்துறை அருகே உள்ள ஈத்தவிளை பகுதியை சேர்ந்தவர் முருகன் மனைவி அமுதா. இவர் வீட்டின் மாடியில் ஏறி கொய்யாப்பழம் பறித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த ஆஸ்பெட்டாஸ் ஷீட் விளிம்பில் மிதித்த போது, ஷீட் உடைந்து விட்டதாக தெரிகிறது. இதனால் நிலையில் தடுமாறி கீழே விழுந்த அமுதாவிற்கு காயம் அடைந்தார்.

அவரை உடனடியாக மீட்ட உறவினர்கள் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவனந்தபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இன்றி அமுதா நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# 2027 ஆம் ஆண்டிற்கான பத்ம விருது பெற விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சியர் ரவிகுமார் தகவல்

திருப்பத்தூர்: ஜூலை:28, திருப்பத்தூர் மாவட்டம் இந்தியாவில் உள்ள சிறந்த சாதனையாளர்களை அங்கீகரிக்க கலை இலக்கியம் கல்வி விளையாட்டு மருத்துவம் சமூக சேவை அறிவியல் பொறியியல் மத்திய அரசு பணி தொழில் ஆகிய துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வருபவர்களுக்கு ஆண்டுதோறும் பத்ம விருதுகள் குடியரசு தின விழாவில் வழங்கப்பட்டு வருகிறது. 2027 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தனது வாழ்நாளில் தனித்தன்மையுடன் சிறப்பாக சாதனை செய்பவர்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம் இவ்விருது எப்பொழுதும் உயரிய சாதனை செய்பவருக்கே வழங்கப்படும் இந்த விருது விண்ணப்பிப்பவர்கள்சாதனை எல்லோராலும் விரும்பத்தக்கதாக இருக்க வேண்டும் இவ்விருது உயர்ந்த தர நிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும்.

பத்ம விருதுகள் நாட்டிலேயே இரண்டாவது உயரிய விருதாக இருப்பதால் இந்த விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஏற்கனவே அவர்கள்துறையில் தேசிய விருதோ அல்லது குறைந்தபட்ச மாநில விருதோ பெற்றிருக்க வேண்டும். இவ்விருதுக்கு உரிய வரை தேர்ந்தெடுக்கப்படும் போது சமூகத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள பெண்கள். நலிவடைந்த சமுதாயத்தினர். தாழ்த்தப்பட்டவர்கள். சீர் மரபினர் மாற்றுத் திறனாளிகள் இவர்களில் தகுதி உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பரிந்துரை செய்யப்படும்.

சிறந்த சாதனையாளராக இருந்து இறந்தவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுவதில்லை. எனினும் மிகுந்த தகுதியானவர்களுக்கு இந்த விருது அறிவிக்கும் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் இறந்திருந்தால் இவ்விருது பரிசீலிக்கப்படலாம். விண்ணப்பிப்பவர்கள் ஏற்கனவே பத்ம விருது பெற்றவராக இருந்தால் மீண்டும் விண்ணப்பிக்க இவ் விருது பெற்ற நாளிலிருந்து ஐந்து வருடத்திற்கு பிறகு விண்ணப்பிக்க முடியும் எனினும் மிகச்சிறந்த சாதனையாளர்களுக்கு காலக் கட்டுப்பாட்டில் விதிவிலக்கு அளிக்கப்படும் அரசு பணியாளர் பொது நிறுவனத்தில் வேலை செய்பவர்களில் மருத்துவர். விஞ்ஞானிகள் தவிர மற்றவர்கள் பத்ம விருதுக்கு விண்ணப்பிக்க இயலாது.

இந்த தகுதிகளுடையவர்கள் விண்ணப்ப படிவத்தை *http://awardsgov.in/* என்றஇணையதளத்தில் தரவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து அதே இணையதளம் மூலம் வரும் ஜூலை 31ம் தேதிக்குள்விண்ணப்பிக்க வேண்டும். இவ்விருதிற்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இவ் வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர்கு.ரவிகுமார் தெரிவித்துள்ளார்.

# தென்தாமரைகுளம் அருகே குளத்தில் மூழ்கி எலக்ட்ரீசியன் பலி

தென்தாமரைகுளம்., ஜூலை. 28 தென்தாமரைகுளம் அருகே குளத்தில் மூழ்கி எலக்ட்ரீசியன் பலி தென்தாமரைகுளம்., ஜூலை. 28. திருநெல்வேலி மாவட்டம் லெவிஞ்சிபுரம் அருகே உள்ள மாடம் பிள்ளை தர்மத்தை சேர்ந்தவர் பாலமுருகன் (வயது 47),இவரது மனைவி தங்கநாயகி (வயது 37) இவர்களுக்கு இரண்டு ஆண்குழந்தைகள் உள்ளனர். பாலமுருகன் எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்துள்ளார்.

கணவன், மனைவிக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த ஒரு வருடமாக பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில் பாலமுருகன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியதாக கூறப்படுகிறது. இந்நிலையில் சம்பவத்தன்று மாலை பாலமுருகன் மற்றும் அவருடைய நண்பர்கள் சேர்ந்து மதுகுடித்துவிட்டுபோதையில் பாலமுருகன் தென்தாமரைகுளம் அருகே நரியன்விளையில் உள்ள தலக்குளத்தில குளித்து கொண்டிருக்கும் போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு மூழ்கி இறந்துள்ளார். இது குறித்து அக்கம் பக்கத்தினர் தென்தாமரை குளம் போலீசாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து விரைந்து வந்த போலீசார் பாலமுருகன் உடலை கைப்பற்றி ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து அவரது மனைவி தங்கநாயகி கொடுத்த புகாரின் படி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# களியக்காவிளையில் கனிம லாரி டிரைவர்கள் போராட்டம்



நாகர்கோவில், ஜூலை 28 கன்னியாகுமரி மாவட்டம் வழியாக கேரளாவுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்வது தொடர்ந்து நடைபெற்று வந்தது. இரவு பகல் சாரை சாரையாக செல்லும் கனிம வள லாரிகளால் பொதுமக்கள் பெரும் பாதிப்படைந்தனர். விபத்துகளால் நூற்றுக்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இந்த நிலையில் குமரி மாவட்ட நிர்வாகம் கனிம வள லாரிகளுக்கு தடை விதித்துள்ளது. இதனால் தங்களுடைய வாழ்வாதார பாதிக்கப்படுவதாகவும், இந்ததடையைநீக்கவேண்டும் என வலியுறுத்தி கனிம வள லாரி ஓட்டுனர் சங்கம் சார்பில் தமிழக கேரள எல்லை பகுதியில் இருந்து தங்கள் லாரிகளை ஊர்வலமாக கொண்டு சென்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் லாரிகளை ஒப்படைக்கும் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தனர்.

இதை ஒட்டி தமிழக கேரள எல்லையான களியக்காவிளை சோதனை சாவடியில் பாதுகாப்புக்காக கூடுதலாக ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர். இது போன்று நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் பாதுகாப்பிற்காககூடுதல்போலீசார் குவிக்கப்பட்டனர்.

இதனிடையே போராட்டம் நடத்த லாறிகளோடு தமிழக கேரள எல்லையில் கேரளா பகுதியில் லாரிகளுடன் ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்கள் குவிந்தனர். தொடர்ந்து எல்லை பகுதியில் இஞ்சி விளை லாரி குடோனில் நிறுத்தி வைத்திருந்த லாரிகளை எடுக்க விடாமல் தமிழக கேரள போலீசார் தடுத்து நிறுத்தினர். அப்போது லாரி உரிமையாளர்கள், ஓட்டுனர்கள் அவர்களிடம் வாக்குவாதம் செய்தனர்.

தொடர்ந்து திடீரென லாரியோடு களியக்காவிளையில் இருந்து நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் ஊர்வலமாக சென்றனர். பின்னர் சாலையில் அமர்ந்து மறியல் செய்ய முயன்றனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஆனால் திடீரென நாகர்கோவில் திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தி சாலை மறியல் போராட்டம் செய்தனர். இதில் ஆத்திரமடைந்த கேரள போலீசார் போராட்டம் நடத்தியவர்களையும் தமிழக செய்தியாளர்களையும் ஒருமையில் திட்டி அனைவரையும் அங்கிருந்து துரத்தினர்.

தொடர்ந்து போராட்டக்காரர்கள் தமிழக கேரள எல்லை பகுதியி களியக்காவிளை சோதனை சாவடியில் தங்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். அப்போது தமிழக போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி, சங்கநிர்வாகிகளை எஸ்பி அலுவலகத்தில் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி உடன் பாடு ஏற்படுத்தலாம் என்று உறுதி கூறியதை தொடர்ந்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.





# அப்துல் கலாம் நினைவு நாள் திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பில் அனுசரிப்பு.

திருப்பூர் ஜூலை: 28,, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாமின்11ம்ஆண்டு நினைவு அஞ்சலி! முன்னாள்ஜனாதிபதி அப்துல் கலாமின் நினைவு தினத்தை ஒட்டி, திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பில் சட்ட ஆலோசகர் அலுவலம் முன்பாக வழக்கறிஞர் எஸ்.ஏ.சுப்புராஜ் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் திருவுருவ படத்துக்கு சங்க தலைவர் ஈ.பி.அ.சரவணன், செல்வகுமார், பொன்னுசாமி, புதிய திருப்பூர் சமூக விழிப்புணர்வு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் ஜான் சாமுவேல், நல்லூர் நுகர்வோர் நலமன்றம் தலைவர் சண்முகசுந்தரம், ரவி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அப்துல் கலாம் திருவுருவ படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்..

# கோவைக்கு தேவை மெட்ரோ ரயில் மறுமலர்ச்சி மக்கள் முற்றுகை போராட்டம்; 40 பேர் கைது





கோவை ஜூலை:28 கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி மறுத்த ஒன்றிய அரசை கண்டித்து,வருமான வரித்துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம். கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி மறுத்த ஒன்றிய அரசை கண்டித்து, கோவை பந்தய சாலையில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம், மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் தலைவர் வே.ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அப்போது செய்தியாளர்களிடம் மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் தலைவர் வே. ஈஸ்வரன் கூறுகையில், ஒன்றிய அரசு 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்துவதற்கு உகந்த நகரங்களாக இந்தியா முழுவதும் உள்ள 18 மாநகரங்களுக்கு அனுமதி அளித்தது. அதில் கோவையும் ஒன்று. கோவைக்கு அடுத்த நிலையில் இருந்த கொச்சியில் மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்தப்பட்டு தற்போது மக்கள் பலனடைகின்றனர். கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்துவோம் என்று 2024 ஆம் ஆண்டு பாரதிய ஜனதா கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றிருந்தால் கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு தகுதியான நகரமாக ஆகிவிடுமா? கோவையை விட மக்கள் தொகையில் குறைந்த பரப்பளவில் குறைந்த பொருளாதார வளர்ச்சியில் குறைந்த வட மாநில மாநிலங்களில் மெட்ரோ ரயில் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. கோவைக்கு மெட்ரோ ரயில் திட்டம் வந்தால் இந்தியாவின் மிகச் சிறந்த நகரமாக கோவை வளரும் கோவை வளர்ச்சியை தடை செய்யும் விதமாக ஒன்றிய அரசின் அறிவிப்பு உள்ளது. இந்தியாவிற்கு மிகப்பெரிய அளவில் வருமான வரி ஈட்டி தருகின்ற கோவைக்கு இந்தத் திட்டத்தை தர மறுத்த ஒன்றிய அரசை வன்மையாக கண்டிக்கிறோம் என்றார். மேலும் கோவை மாநகர வளர்ச்சிக்கு மாபெரும் துரோகம் செய்கிற ஒன்றிய அரசை கண்டித்து மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் சார்பாக வருமான வரித்துறை அலுவலகம் முற்றுகையிடும் போராட்டத்தை நடத்துகிறோம் என்றார். எங்கள் கோரிக்கையை ஏற்காவிட்டால் டெல்லி ஜந்தர் மந்தர் சென்று அங்கும் மிகப்பெரிய போராட்டத்தை கையில் எடுப்போம் என்று அதிரடியாக கூறினார். மேலும் மறுமலர்ச்சி மக்கள் இயக்கம் முற்றுகை போராட்டம் நடத்தப் போவதை அறிந்த காவல்துறை முன்கூட்டியே காவலர்களை குவித்து வைத்திருந்தது இதனால் பந்தைய சாலை பகுதி சற்று பதட்டமான சூழ்நிலையில் இருந்தது.

முற்றுகைப் போராட்டம் செய்த மறுமலர்ச்சி மக்கள் இயக்கத்தின் தலைவர் வே. ஈஸ்வரன், தலைமை நிலைய செயலர் ராஜ், கலை இலக்கிய அணி செயலாளர் பட்டாபி, உட்பட ஏராளமானோரை காவல் துறை கைது செய்து சென்றது.

# போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்து அபாயம்





திருப்பூர் மங்கலம் சாலையிலுள்ள குமரன் கல்லூரி பகுதியில், தினசரி மாலை 3 மணி அளவில் பல்வேறு வழித்தடங்களில் இயங்கும் 15க்கும் மேற்பட்ட மினி பஸ்கள் விதிமுறைகளை மீறி கூட்டமாகச் சாலையிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனால் அந்தப் பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், விபத்துகளும் தொடர்கதையாகி வருகின்றன.

மாணவர்கள் சிறைபிடிப்பு:

மாலை நேரத்தில் குமரன் கல்லூரி முன்பாக விதிகளை மீறி நிறுத்தப்படும் இந்த மினி பஸ்களின் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள், அரசு இலவச பேருந்துகளில் செல்லக் காத்திருக்கும் மாணவமாணவிகளை வலுக்கட்டாயமாகத் தடுத்து நிறுத்தி, தங்கள் மினி பஸ்களில் ஏறுமாறு அராஜகத்தில் ஈடுபடுகின்றனர். அரசு பேருந்துகள் வராத அவலம்: குறிப்பாக மாலை 3:00, 3:10, 3:20 மணி ஆகிய குறிப்பிட்ட நேரங்களில் இயக்கப்பட வேண்டிய அரசு டவுன் பேருந்துகள் சரிவர வருவதில்லை. இதன் காரணமாகவே மாணவமாணவிகள் இலவசப் பேருந்து வசதியைப் பயன்படுத்த முடியாமல், மினி பஸ்களில் கூடுதல் கட்டணம் கொடுத்து பயணிக்கும் அவல நிலை செயற்கையாக உருவாக்கப்பட்டு வருகிறது

அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் இயங்குவதில்லை:

திருப்பூர் மாநகரப் பகுதிகளில் இயக்கப்படும் பெரும்பாலான மினி பஸ்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட பர்மிட் வழித்தடங்களில் செல்வதில்லை. மாறாக லாபம் தரும் மத்திய பேருந்து நிலையம், கோவில் வழி, புதிய பேருந்து நிலையம் ஆகிய மூன்று முக்கியப் பேருந்து நிலையங்களை இணைக்கும் மெயின் ரோடுகளிலேயே தொடர்ந்து வட்டமடிக்கின்றன. இதனால் உட்புறப் பகுதி மக்களுக்கு மினி பஸ் சேவை முழுமையாகக் கிடைப்பதில்லை.

நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

இது தவிர, மினி பஸ்களில் அரசு நிர்ணயித்த கட்டணத்தை மீறி கூடுதல் கட்டணக் கொள்ளையும் தடையின்றி நடைபெற்று வருகிறது. இது குறித்துப் பலமுறை புகார்கள் அளித்தும் எந்தவித முறையான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, காவல் துறை, வட்டாரப் போக்குவரத்துத் துறை (RTO) மற்றும் அரசுப் போக்குவரத்துத் துறை ஆகிய துறையினர் ஒன்றிணைந்து, மினி பஸ்களின் கட்டண விவரங்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்கள் குறித்த விபரப் பலகையை பஸ்களில் காட்சிப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். மேலும், விதிமீறலில் ஈடுபடும் பஸ்கள் மீது தொடர் கண்காணிப்பு நடத்தி உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

## களியக்காவிளை அருகே

# சட்ட விரோதமாக பாறை உடைத்த வாகனம் பறிமுதல்

களியக்காவிளை, ஜூலை.28 குமரி மாவட்டத்தில் சிலர் தனியார் நிலத்தில் இருந்து பெரிய பாறைகளை உடைத்து கேரளாவிற்கு கடத்துவதாக புகார் வந்ததை தொடர்ந்து போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தீவிர நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உத்தர விட்டார். அதன் படி களியக்காவிளை போலீஸ் இன்ஸ் பெக்டர் பரமேஸ்வரன் தலைமையில் போலீசார் பொன்னப்ப நகர் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது ஒரு தனியார் நிலத்தில் பெரிய பாறைகளை உடைப்பதை பார்த்து அங்கு விரைந்து சென்றனர். அவர்களை பார்த்ததும் 2 பேர் பாறை உடைக்கும் வாகனத்தை நிறுத்தி விட்டு தப்பியோடினர். இதை தொடர்ந்து போலீசார் அந்த வாகனத்தை பறிமுதல் செய்து போலீஸ் நிலையம் கொண்டு சென்றனர். தொடர்ந்து நடைபெற்ற விசா ரணையில், சட்ட விரோதமாக பாறை உடைக்கப்படுவது தெரிய வந்தது. இது தொடர்பாக வாகனத்தின் மீது வழக்கு பதிவு செய்த போலீசார். நிலத்தின் உரிமையாளர், வாகனத்தின் உரிமையாளர் யார்? '

என்று விசாரணை நடத்தி வருகின்ற னர். மேலும் சட்ட விரோதமாக கனிம வளம் கடத்தல், பாறை உடைத்தல் போன்ற செயல்க ளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக் கப்படும்என எச்சரித்துள்ளனர்.

# நிரந்தர ஆணையாளர் நியமனம் – புதிய பேருந்து நிலையப் பணியை விரைந்து முடிக்க வேண்டும்!



திருப்பூர்: ஜூலை28 தாராபுரம் நகராட்சி நிரந்தர நகராட்சிஆணையாளரை நியமிக்க வேண்டும் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணி மற்றும் ராஜவாய்காலின் குறுக்கே மூன்று பாலங்கள் கட்டும் பணி விரைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆவணம் செய்ய வேண்டும்!

தாராபுரம் நகராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ553.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணியானது 95% முடிக்கப்பட்டுள்ளது மீதம் 5% பணிகள் மட்டுமே முடிக்கப்படாமல் உள்ளது. இப்பணியினை விரைந்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இப்பணிகளில் காலதாமதம் ஏற்படுவதால் வணிகர்கள், பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இப்பணியானது நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் முக்கிய பணியாக இது உள்ளது. மீதமுள்ள 5% பணிகள் மூன்று மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது

பற்றாக்குறை நிதி இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதியின் கீழ் தாரபுரம் நீர் வளத்துறையின் வாய்காலின் (ராஜவாய்கால்) குறுக்கு மிக முக்கியமான நகர் பகுதியினை இரண்டாக பிரிக்கும் பாலத்தினை இடித்து புதிய பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது மிகவும் தொய்வாக நடைபெற்று வருகிறது. இதனால் பொதுமக்கள் அவசர காலங்களில் மருத்துவமணை, மருத்தகம். பேருந்து நிலையம் பள்ளி கல்லூரிகளுக்கு சென்று வர சிரமப்பட்டு வருகின்றனர். மேலும், பழைய காவல் நிலைய வீதியின் அமைந்துள்ள பாலம் கட்டும் பணியானது இன்றனவும் துவங்கப்படாமல் உள்ளது. எதிர்வரும் காலங்களில் பாசனத்திற்காக வாய்காலின் தண்ணீர் திறக்கப்பட்டால் பணி மேற்கொள்ள இயலாது. என மாவட்ட ஆட்சியாளரிடம் கோரிக்கை மனுவினை தாராபுரம் நகராட்சி தலைவர் பாபு கண்ணன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 25 வார்டு உறுப்பினர்களும் ஒன்றாக சேர்ந்து மனு அளித்தனர்..

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.